

யாழ்ப்பாணம் அச்சுவேலி கதிரிப்பாயைப் பிறப்பிடமாகவும்
இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி. சின்னத்துரை யோகம்மா

அவர்களின்

# - நினைவு மலர் -

16.07.2012

உ

சிவமயம்



## அமரர். திருமதி யோகம்மா சின்னத்துரை அவர்கள்

**தோற்றம்**
**28.11.1928**

**மறைவு**
**16.05.2012**

### திதி நிர்ணய வெண்பா

நந்தன ஆண்டமைந்த நல்லானித் திங்களதன்
அபரபக்கம் அடைதிரயோதசி தன்னில் - சீரமைந்த
சின்னத்துரை யோகம்மா எனும் சிறப்புடையாள்
அமரனடி அடைந்தநாளென்றே காண்

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரந்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகிறேனே

## தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சால(ப்) பரிந்து நீர் பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து சிவபுரம் அளித்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத் திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம் குளிரஎன் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

### திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல(ம்) நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவி யோம மாகுந் திருச்சிறம் பலத்து னின்று
பொற் புடனடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

### திருப்புகழ்

ஏறு மயில் ஏறி விளையாடு முகம் ஒன்றெ
ஈசருடன் ஞான மொழி பேசுமுக மொன்றே
கூறு மடியார்கள் வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுக மொன்றே
ஆறு முகமான பொருள் நீ யருள வேண்டும்
ஆதி யரு ணாசலம் மர்ந்த பெரு மாளே

### திருவருட்பா

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய் பிடியா திருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்க வேண்டும்
உனை மறவா திருக்க வேண்டும்
மதி வேண்டும் நின்கருணை நிதிவேண்டும் - நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தண் முகத் துய்ய மணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

ஓம் சரவண பவ

கந்தர் கஷ்டி கவசம்

காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும்கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டிகவசந்தனை

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக

என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியுங்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றேன் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலியாஞ் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணி முடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா விநோதன் என்(று)
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணை வேல் காக்க
முன்கை இரண்டும் முரண் வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இததுன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரமும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலற மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கள்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திக ழொளி பவனே
பரிபுர பவனே பவம் ஒழிபவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ் சிறைவிடுத்தாய்

கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடுப்பனை அழித்த, இனிய வேல்முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவின் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரி வாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்

ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்த முதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட் கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

**தளர்வறியாத் தாயே...**

உடல் சுமந்து ஊன் உருக்கி
எமை ஈன்ற அம்மா–தந்தையை நாம்
தகாத வேளை இழந்திட்டபோதும்
மனந்தளராதுஎமைக் காத்தஅம்மாவோ–அம்மா

கடல் கடந்து நாமிங்கு வாழ்கின்றபோதும்
கடமையுடன் எமையடைந்து அரவணைத்த தாயே– உன்
உடல் சோர்ந்துமனம் தளர்ந்து தள்ளாடு முன்பே
உன் உயிர் உறங்கிபோனதுவோ –அம்மாவோ அம்மா

பெற்றெடுத்த தாயே பேரின்பப் பேரொளியே
கற்றுநாம் வளர்ந்திடவே காவலாய் நின்றவளே
ஏற்றதெல்லாம் வந்தாலும் ஏங்கா மனங் கொண்டவளே
சுற்றமெலாம் சுழல சுடரொளியாய்ப் போனாயோ-அம்மாவோஅம்மா

ஈன்றெடுத்த தாயே இரக்கமனம் கொண்டவளே
இளைப்பறியா உத்தமியே பொறுமையின் பொக்கிசமே
தளர்வறியாத் தாயேதயாள குணம் கொண்டவளே
நிமலனவன் பாதத்தில் நீக்கமற நிறைந்தனையோ

**உன் பிள்ளைகள்**
**சரமக்கொடி, ஜெயக்கொடி**

---

**மகள் புஸ்பா மனதிலிருந்து...**

பெற்றநாள் முதல் இறுதி நாள் வரை என்னோடு இணைந்தே இருந்தீர்கள் அம்மா. நீண்ட நாட்களுக்கு முன்பே எங்கள் பாசமிகு தந்தையை இழந்த போதும் அதன் தாக்க மோதார்ப்பரியமோ தெரியாமல் வளர்த்த என் தெய்வமே!

எனக்குப் பாசமிகு அம்மாவாக
நல்ல ஆசிரியராக
சிறந்த நண்பியாக
உயரிய ஆலோசகராக என்னை வழிநடத்தினீர்களே.
என்னைச் சுமந்து பெற்றெடுத்து, சீராட்டித் தாலாட்டி பாலூட்டி
வளர்த்தஎன் அம்மாவுக்கு...கடமைகள் செய்யக் காத்திருந்தேனே...தன்

நாளாந்த கடமைகளை யார் தயவுமின்றி செய்யக் கூடியவராக இருந்தபோதும் என் ஆசையை நிறைவேற்ற என் அம்மா என்னை அனுமதித்தது ஆறேஆறு நாட்கள் மட்டுமே.

தனக்குக் குளிப்பாட்ட.... இது மட்டுமே

உடல் சோரவில்லை...

மனம் தளரவில்லை...
புலன்கள் இழக்கவில்லை கூனிக்குறகவில்லை

எப்படித்தான் கடமை செய்வது...

வைத்தியசாலைக்கு ஒவ்வொரு நாளும் செல்வேன்.
என் கணவர் பார்த்துவிட்டு வந்ததும் நான் செல்கிறேன்.
அந்த அறைக்குள் செல்லும்போதே ஒரு தாதிதடுக்கிறார். என்றாலும் எட்டிப் பார்த்துவிட்டேன். உங்கள் அம்மாவை டாக்டர் பரிசோதிக்கிறார் என்றார்.
வழமைதானே என நினைத்து நானும் நிற்கிறேன். சிலநிமிடத்தில் ஒருவர் வந்தார். Your mum is very nice என்றார். அடுத்தநிமிடம் ஒருடாக்டர் வந்தார்.
I am very sorry என்று சொல்லிக் கொண்டே கீழே பார்த்தார். Your mum has passed away என்று நடந்து கொண்டே சொன்னார். நான் தடுமாறி, மூசச்சையாகி, நாக்குழறி.... என் அம்மா எங்கே...எல்லாம் சிலநிமிடங்களுக்குள்.. இத்தனைக்கு ஆக மூன்றுநாட்களே. வைவத்தியசாலையில் இருந்தார்.

கருவுள் உருவாகி கருவறை தான் தஞ்சமென நான் இருந்தவேளை கத்தியா அழுதீர்கள்?
எனை இன்று கதறவைக்க என்னம்மா பிழைசெய்தேன். நானின்று அழுவதற்கு மூத்தவளாய் என்னை முத்தெனவே ஈன்றெடுத்து சொந்தம் நீ தானென்று எனை எப்பொழுதும் பிரியாமல் பாசத்தால் பிணைத்து கைதியாகவைத்தாயே. ஏனம்மா இம்முடிவு? இறைவன் சதிசெய்தானோ! இல்லை இதுதான் விதியானதோ.
என் அம்மா!

உன் கனவே என் நனவம்மா
உன் வார்த்தையே என் வேதமம்மா
என் உயிரே நீ என் தெய்வமம்மா
உம் பாதமே எந்தன் கோயிலம்மா

**உங்கள் அன்புமகள்**
**புஸ்பா தவத்துரை (ஆசிரியை)**

## என் இதய தெய்வமே அம்மா...

நான் கதைக்கும்போதே அலசி ரோய்ந்து கொண்டே கேட்டீர்களே! சோல்லி முடிந்தவுடன் அதன் சாரம்சத்தையும் தீர்வையும் உடனே கூறிவிடுவீர்களே! கணப்பொழுதில் புரிந்து கொள்ளும் திறன் கொண்ட என் அம்மாவே!

இளம் வயதிலே கடின உழைப்பாளியான எங்கள் அப்பாவை இழந்தபோதும், வழி இல்லையே என்று மாண்டு விடாது உங்களையும் தேற்றி, எங்களையும் தேற்றி, நல்விழிப்படுத்தி உயர்த்தியவரே!
தான் பறக்கும்போதே தன் குஞ்சுகளையும் பறக்கப் பழக்கிவிடும் புறாக்களைப்போல நான்கு பிள்ளைகளையும் நன்னெறிப்படுத்தி வாழவைத்தீர்களே!
பிள்ளைகள் உங்களைத் தேடிவர முடியவில்லை என்றாலும் நீங்களாகத் தேடிச் செல்லும் பெற்றமனமே.

லண்டனில் அக்காவுடன் இருந்தாலும், அருகில் உள்ள தம்பி வீட்டுக்கும் போய், பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் பேசி மகிழ்வீர்களே! பரிசிற்கு என்வீட்டிற்கு, பேர்லினிற்கு சின்னத்தம்பி வீட்டிற்கு, தேடியே வந்தீர்களே..

செல்லக்குட்டி, பொம்மைக்குட்டி, ஐயாக்குட்டி, பவுண்குட்டி, அக்சி குட்டி, சாயாக் குட்டி என செல்லப் பெயர் சொல்லி உங்கள் பேரப்பிள்ளைகளை வாரி அணைத்து பாசத்தை பொழிவீர்களே.
இனியார் வருவார், அதை நிறைக்க...

என்பத்தி நான்கு வயதிலும் எண்ண முடியாத மன உறுதி
தள்ளாடாத உடல் உறுதி, கூனிக்குறுகவில்லை
புலன்கள் குறையவில்லை, நிமிர்ந்த நடை பேச்சுத் தெளிவு
இறுதி வரை இருந்ததம்மா.
என் தாய் போல் இன்னொருவர் வரமுடியுமா என்ற இறுமாப்பில் இருந்தேனே...

காலன் கண் வைத்தானோ, கடவுள் அழைத்தானோ.
என் நடமாடும் தெய்வம் இப்போது வானுறையும் தெய்வமாக...

**உங்கள் அன்பு மகள்**
**யோகா அரசரட்ணம்**

## தம்பி செல்லத்துரை புலம்பல்

சிறு வயதில் தந்தையை நாம் இழந்தபோது
தாயாக தந்தையாக எனை வளர்த்தாயே
நான் தளர்ந்து தடுமாறி நின்றபோது
தட்டிக் கொடுத்தென்னை தலைநிமிரவைத்தாயே.

சினமறியா சிந்தை கொண்ட சின்னக்காவே
தனக்கெனவே ஏதும் எண்ணா தர்மத்தாயே
எனைத் தனியே இங்கிருந்தே உழல விட்டே
புணைகழலோன் பாதம் புகுந்திட்டாயே.

உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கும் தம்பி

**வே. செல்லத்துரை குடும்பம்**
பிரான்ஸ்

---

## இறைவா - இதுவே விதியென்பதா

ஈன்ற தாயினை நான் இழந்த போதும்
வளர்க்கும் தாயுடனே வாழ்ந்திருந்தேனே

நேசமது காட்டி நெஞ்சில் நிறைதாயை – தேசிகா
நொடிப் பொழுதில் பறித்தென்னை நோகடித்து விட்டாயோ

தன் பிள்ளை என நினைத்து தாயாக காத்தவளை
எப்போதும் எங்கும் எம்முடன் இருந்தவளை
இறுதி நேரம் நீரும் சொல்லும் என்னிடத்தே பகர்ந்தவரை - இறைவா
கடைசி வறை தெரியாமல் எப்படிக் கவர்ந்தாயடா.

நித்தம் இதை நினைந்து உருகி மனம் நொந்து
சத்தம் ஒதுமின்றி செத்தே போகின்றேனே
பித்துப் பிடித்தது போல் பிதற்றி அழுகின்றேனே - இறவைா
இதுதான் நீயென்றால் உனை எனக்கெதற்கு,

எழுதாத புத்தகத்தை, நடமாடும் நூலகத்தை
பழுதேதுமில்லாத பாசமனத்தாயை – விமலா
விழு மாலை நேரமதில், விசனமேயின்றி
விழுதுகளில் தாங்காமல் விண்ணுலகம் அழைத்தாயோ

'நற்பேறு நல்கிடப்பா'
**அன்பு மருமகன்**
**மா. தவத்துரை**

**பாசத்தைக் காட்டிய மாமியே...**

என் மனைவியின் தாயாக எனக்கு மாமியாக
என் பிள்ளைகளுக்கு பேர்த்தியாக
பாசதீபமாக இருந்து எங்களுக்கெல்லாம்
அன்பை உணர்த்தி
அறிவை புகட்டி
நல் ஆசானாக வாழ்ந்த
என் மாமியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்

**அன்பு மருமகள்**
**ச அரசரட்ணம்**
**பிரான்ஸ்.**

---

**Dear Appamma,**
*Thank you for your gift of love.*
*Now you're sharing it up there.*
*You had many things to say.*
*All in a caring way.*
*You always saw good in everyone.*
*You were the one we could always lean on.*
*Even though it felt like a ton. You were always the strength of*
*Our family, now we must let you rest in peace.*
*As we say "GOODBYE!" Tears roll down our eyes.*
*I know your place in heaven has a good view on us.*
*Because you love us so much.*
*You will always be living in our hearts and minds.*
*We will never forget that you were one of a kind.*

***Your Grand child***
***Jenishan***

## அம்மா என நினைத்த அன்பு மாமியே...

தாய்க்குத் தாயாக அன்புகாட்டி, பிள்ளைகளில் ஒருவராக பாசத்துடன் அரவணைத்து, நல்லதைப் பாராட்டி வழி நடத்திய எங்கள் மாமியே, நீங்கள் யாரையும் சினந்ததோ, கோபப்பட்டதோ நாம் கண்டதில்லை, ஏசியதோ பேசியதோ கேட்டதில்லை.

மிக சுலபமாக எதையும் புரிந்து செயல்படு விவேகம் கொண்ட நீங்கள் இறுதி மூச்சுவரை செவிப்புலனோ, விழிப்புலனோ இழக்கவில்லை.
கூனிக் குறுகாமல் நிமிர்ந்து நடந்து வந்து, உங்கள் நாளாந்த
கடமைகளை நீங்களே செய்து கொண்டிருந்த நல்ல
ஆரோக்கியம் மிக்க எங்கள் மாமியே.

எப்போதும் எல்லோரும் பண்பாகவும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ வேண்டுமென அறிவுரை கூறி வாழவைக்கும் எங்கள் மாமியே.
சாதாரணமாக சிரித்துக் கதைத்து விட்டு சிதிச்சைக்காக சென்ற
நீங்கள் சீக்கிரமாய் எமை விட்டு பிரிவீர்களென
நாம் நினைக்கவேயில்லை
ஆண்டவன் இப்படித்தான் அழைப்பானோ,
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**அன்புடன்**
**மருமகள்கள்.**
**கலாமாலினி, சமரக்கொடி**
**தர்சினி, ஜெயக்கொடி (ஜேர்மனி)**

---

## அன்பை அள்ளித்தந்த அப்பம்மாவே!

நான் பிறந்த போது, முதல் பேர்த்தி கிடைத்து விட்டாளே எனப் பரவசமடைந்து இலங்கையில் இருந்து பறந்தோடி வந்து செல்லக்குட்டி என செல்லமாய் அழைத்து பாசத்தைப் பொழிந்து உச்சிதனை முகந்து உள்ளப் பூரிப்படைந்தீர்களே,
எத்தனை செல்லப் பெயர்களே எனக்கே தெரியாதே,
என் அப்பம்மாவும் என்னுடன் இருக்கிறார் என நினைத்து கர்வமாக இருந்தேனே,
எத்தனை பேரப்பிள்ளைகள் வந்தாலும் நான்தானே உங்கள் முதல் பேர்த்தி என நினைத்து பெருமைப்பட்டேனே.

எங்களுடனும் அத்தையுடனும் இருந்தாலும் சித்தப்பா வீடு சின்னத்தை வீடு என பேர்லின், பரிஸ் எல்லாம் உலா வருவீர்களே.
எண்பத்து நான்கு வயதிலும் இளமை மாறாத சிந்தனை

எண்ண முடியாத உற்சாகம்
கோபமறியாத மனம்
சினமே அறியாத சிந்தனை
சிரிப்புமாறாத முகம்.

என் கண்களில் இப்போதும் காட்சியளிக்கிறது.
உங்களைப் பற்றி சொல்ல நூறாண்டுகள் தேவை அப்பம்மா.
என் அப்பம்மாவின் இடத்தை யாராலும் நிரப்பமுடியாது.
கண்களில் நீர் பனிக்கிறது, என் உள்ளம் உறைகிறது.
அப்பம்மா நீங்கள் தந்த தமிழால், உங்களையே சொல்லவைத்து விட்டீர்களே.
அப்பம்மா ஒரு முறை சொன்னீர்களே! நாங்கள் இறப்பதில்லை இறைவனிடம் செல்வோமென்று -- அதுதானோ, இற்த இடமாற்றம்.
இறைவா உன்னிடம் ஒன்று கேட்கிறேன் - என் அப்பம்மாவை உன் பாதத்தில் இளைப்பாற இடங்கொடப்பா.

**உங்கள் பேர்த்தி**
சாருகா.

---

## கல்யாணி என அழைத்த அம்மம்மாவே...

பவுண்குட்டி வாடா என பாசமாய் அணைத்தவரே
குட்டிக் கதைகள் சொல்லி கும்மாளமடித்தவரே
நண்பியாய் நின்று விளையாடி மகிழ்ந்தவரே
நேசக் கதைகள் சொல்லி செஞ்சமெலாம் நிறைந்தவரே
பாசமாய் அணைத் தென்னைப் பாராட்டி வளர்த்தவரே!

என் அம்மம்மா வருவாரென அகல விழிவைத்து
அங்கலாய்த்து நிற்கையிலே,
சொப்பனம்தான் சொன்னதுவோ
சோகம்தான் வந்ததுவோ
தெய்வம் உமை அழைத்து
தேவதையாய்க் கொண்டதுவோ

அம்மம்மா நீங்கள்
விண்ணுலகில் விழித்திருந்து
எனை, வழி நடத்தும் ஆசானாய்
வாழ்விக்கும் தேவதையாய்
என் வாழ்வின் ஒளி விளக்காய்

ஆண்டவன் அடியில்
அணையா அகல்விளக்காய்
என்றும் ஒளிவிடுவீர் - என நம்பி
அரண்தாழ் பணிகிறேன் - அம்மம்மா,

**உங்கள் பேர்த்தி**
**யுவனிஸ்கா.**

---

***Eulogy Speech***

## Where are you Appamma, Ammamma...

*You are a very nice and sweet grandma,*
*you were always surrounded by our families and friends.*
*You are a granny that meant so much to me.*
*You were in my heart for a very long time.*
*But now you are gone.*
*I can see you standing like an angel in disguise,*
*who taught to care.*
*I long, to hear you voice for real, not in my dreams.*
*I am missing you so much in the past few days.*
*The world seems empty without you.*
*People say time heals all wounds that someday the pain will subside. But grandma I can tell you the emptiness I am feeling now is strong and I am weak to go without you.*
*Why did this happen to you?*
*We never imagined the picture of saying goodbye to you.*
*We never imagined this day would come too soon.*

**I MISS YOU SO MUCH APPAMMA.**

***Your grand child***
***Lavika***

## Appampa! We are missing you!

*Appamma, where have you gone?*
*How could you have the heart to leave us in sorrow? Appamma, did you ever think you are leaving your grand-children?*
*We are staying here? Why did you go away?*
*Oh, we think God likes you better than us because, he has only called you up there.*
*We hope, God will bless you and you will have a great life in heaven.*

***Your grandchildren***
***Tharun, Aksayan, Saruja***

---

## ஜெயச்சந்திரன் உள்ளத்திலிருந்து...

அன்புக்கு இலக்கணமாய் நின்றாயே
பண்புக்கு பாத்திரமாய் அமைந்தாயே
பாசத்தின் பிறப்பிடமாய் நின்றாயே
பார்போற்றும் உத்திமியாய் வாழ்ந்தாயே

உன் சிரிப்பால் சீரிய நடைபோட்ட எனமயெலாம்
சிதறிடிக்க வைத்து விட்டு நீ மட்டும்
சிதகடித்துப் பறந்துவிட்டாய்.

உன் அன்பு வதனம் தேடி எம்
கண்களெல்லாம் ஏங்குதம்மா – நீ எங்கு சென்றாய்.
உன் பாதச் சுவடு பட்ட இடங்களெல்லாம்
உன் பாசத்துக்காய் ஏங்குதம்மா – நீ எங்கு சென்றாய்

பெரியதம்பி என்னபாய் சின்னத்தம்பி என்பாய்
பிள்ளையென்பாய் சின்னத்தங்கச்சி என்பாய்
அந்த ஆசைக்குரல் கேட்க ஏங்குதம்மா பிள்ளை மனம்
எந்தன் சின்னம்மா எங்கு சென்றாய்

செல்லக்குட்டி என்பாய் பொம்மைக் குட்டி என்பாய்
ஐயாக்குட்டி என்பாய் பவுண்குட்டி என்பாய் - உன்
ஆசை வார்த்தைகளுக்காய் பேரக்குழந்தைகளிங்கே ஏங்குதம்மா
அந்தப் பிஞ்சுமனத்தை ஏங்கவைத்து நீ எங்கு சென்றாய்.

வாராசா என்பாய் வந்திரடி அப்பு என்பாய்
உன் அரவணைப்பை பார்பதற்கு — நீ பெற்ற
பிள்ளைகள் நாம் ஏங்குகிறோம் சின்னம்மா
எனம ஏமாற்றி விட்டு எங்கு சென்றாய் சின்னம்மா?

வயசாலே நீ முதிர்ந்தாலும் - உன்
வார்த்தைகளுக்கோ முதிர்ச்சி இல்லை
வாடி என்று அழைத்ததில்லை
வாங்கம்மா பிள்ளையென்று
வந்திருங்கோ செல்லமென்று
நீ
வாயாரச் சொல் வதைக் கேட்பதற்கு — உன்
மருமக்கள் ஏங்கி நிற்க
எமையெல்லாம் ஏங்கவைத்து
எங்கேயம்மா போய்ச் சேர்ந்தாய்

ஆண்டு பல ஆனாலும் - உன்
அன்பு வதனம் எம்மனதை விட்டு
நீங்காது
உயிர் துறத்து
உடல் கருகி போனாலும்
என்றென்று எங்கள்
மனங்களிலே வாழ்ந்திருப்பாய் சின்னம்மா

**அன்பு பெறாமகன்**
**ஜெயச்சந்திரன் கீதரஞ்சனி குடும்பம்**

***ஆக்கம் ஜெயச்சந்திரன்***



**இறைவா!**

அம்மா என அழைத்த ஆருயிரை ஏன் எடுத்தாய
சும்மா நீ விளையாட நாம்தான் கிடைத்தோமா?
எப்போ வந்தாலும் என்னையா எனச்சொன்னார்
இப்போ ஆர் சொல்வார் அவ்வாறுதலை எமக்கு

துக்கமோ துயரமோ இனி சொல்லியழயாருண்டு
பக்குவமாய் பாசமாய் பலகதைகள் சொன்னவரை
பன்புதனைச் சொல்லி, பாவியேம் பதறியழ
எக்காலம் வருமென்று எண்ணியிருந்து அழைத்தாயோ.

ஏலாதென்றெதையுமவர் சொன்னதில்லை
மூலாதி வேதமெல்லாம் முதன்மையாய் சொன்னவரை
காலாதி கடமையெலாம் களராமல் செய்தவரை
காலத்தேவதையே களவாய் கவர்ந்தாயோ.

அம்மா.....
நீங்கள் இட்ட உரம் செஞ்சில் இருக்குதம்மா
நாங்கள் கடமைகளை கெஞ்சார செய்வதற்கே
யோகங்கள் பலகிடைத்த யோகம்மா – தாயே
ஏகன் பாதமது ஏகியே சென்றாயோ!

**அன்பு பெறாமகன்**
**தங்கேஸ்வரன் குகனா குடும்பம்**



## விஜிதவர்ணன் குடும்பத்திலிருந்து...

பெரியம்மா என அழைத்துப் பெருமைபட்டோமே
இருக்கின்றா என நினைத்து இறுமாப்படைந்தோமே
உளமார அணைத்தெம்மை உவகை கொண்டாயே
உத்தமியே உம்நினைவு உள்ளத் திருக்குமம்மா.

பெரியம்மா என்று சொன்னால் பேரின்பம் கிடைக்குதம்மா
சரியெதுவென்றறியாமல் சங்கடங்கள் வந்தபோதும்
பொறிமுறைகள் பல சொல்லி பேராசானாய் நினறாயே
கரிச்சுடலை பொடிகொண்டான் கழலதற்குள் சென்றாயோ.

தங்கையாய் என்தாயை தயவாய் அணைத்தவளே
தங்கமாய் எங்கள் சொந்தத்தை இணைத்தவளே
மருளா மனங்கொண்ட மங்கையாய் இருந்தவளே
அருளாளன் பாதமுனை அரவணைத்துக் கொண்டதுவோ.

பார் புகழும் மங்கையுனை பரலோகமழைத்ததுவோ
பரமனிவன் திருந்தாள் பாசமாய் அணைத்ததுவோ
இறைவனவன் திருப்பாதம் இதமாய்ய் கொண்டதுவோ
அரணவனின் தாழ் அரணாய்க் கொண்டாயோ

ஈசனின் திருத்தாழில் இளைப்பாது தாயே

**அன்பு பெறாமகன்**
**விஜிதவர்ணண் சகிலா குடும்பம்**



## மைத்துனர் மைத்துனிகள் புலம்பல்

அண்ணியாய் இரந்து அணைத்தே வளர்த்தவளே
மைச்சாளை இருந்து மகிமைகள் தந்தவளே
தன்னலமே இன்றி தயவாய் அணைத்தவளே
பொறுமையாய் அரவணைத்து
பொண்ணனிகள் கொடுத்தவளே
பார்க்கவரும்போது பரவசம் அடைவாளே
துன்பமென நினைக்கும்முன்பே தூக்கிக் கொடுப்பவளே
துயரமது வருமுன்பே துடைத்து வருபவளே
காலம் எமக்களித்த காவல் தெய்வமம்மா
அள்ளிக் கொடுத்தே அளவழாவி
மகிழ்ந்தாளே இழைப்பேதும் அறியா இளயமனம் கொண்டவளே
மலையே வந்தாலும் மனங்கலங்கா நிமலினியே
சொல்லியழ வார்த்தையில்லை சொரக்கத் தங்கமானவளே

**மைத்துனர் மைத்துனிகள்**
**அரளம்பலம், பரமகுரு, பரிமளம்,**
**நேசமலர், புவனேஸ்வரி, லக்ஷ்மி, களஞ்சியம்**



## பெரியம்மாவே...

பெரியம்மா என அழைத்த பெரிய மனங்கொண்டவரே
தெரியாமல் நாம் செய்த அனைத்தையுமே பொறுத்தவரே
சரியாக புரியும்வரை எதையும் நினைக்கவில்லை எதையுமே
பரியாமல் தவிக்கிறோம் புனிதத் தாயே புகல்வாயோ

ஆராரோ பாடி எமை அனைத்து வளர்த்தவரே
சீராரும் பூமியிலே சிறப்பைத் தந்தவரே
எல்லோரும் பிள்ளையென எமையும் அனைத்தவரே
பலநாளும் பார்த்திருந்து பரமணவன் அனைத்தானோ

**பெறாமக்கள்**
**சுதாகரன், சுதர்சன், சுஜிதா, பாகேஸ்வரன்**
**சுபேந்திரன்**

## மருமக்கள் புலம்பலம்

மாமியே எனவந்த மங்காத் தாய் அவளே
சாமியே பிறந்தெமக்கு மாமியாய் வந்ததுவோ
போகம் புகழ்விரும்பும்
பூமிதனிலே ஏதும், நினைக்காமல் எமையும் அனைத்தவளே
மாமாவிற்கேற்ற மங்கா அகல்விளக்கே
செங்கை ஆச்சியின் மங்கா மருமகளே
என் அப்பாவின் அக்காவே அனையா அகல்விளக்கே
என்றும் ஒளிவீசும் எங்கள் திருத்தாயே
இறைவன் திருப்பாதம்
உங்களை வரவேற்கும்

**மருமக்கள்,**
**ரூபன் குடும்பம், டிலன் குடும்பம்.**

## It's for you...
## Dieting and Anorexia in the young

*There is medical treatment for diseases that are sometimes caused by obesity. Diseases like diabetes. However, it is easier if these diseases never happen because it is difficult to get a cure.*

*Effective dieting can improve our health and if there is exercise at the same time it can raise fitness levels and affect our muscle tone and strength, turning weak muscles strong.*


*Researchers estimate that there are many more children in the whole UK who are overweight than there were a few years ago. Some are severely overweight. These children risk never learning what a healthy diet is and they may continue to gain weight.*

*On the other hand, determined teenagers, particularly girls, may starve themselves dangerously, the medical term for this is "anorexia". Their blood sugar levels become low, they have less energy and their muscles can become weak.*

*Starvation can lead to worse mood in which they find even harder to accept that their weight loss is dangerous and silly. They may have a poor understanding of what a healthy body looOks like or what they look like. Unfortunately, anorexia can lead to premature death.*

*People who treat teenage anorexics say that risk factors are the insecurity of the person and that they have no experience of the new hormones in their bodies and the changes in their minds and bodies at this often difficult age. There are now chemicals in their blood and new feelings. Another risk factor is the length of the period for which they already have been anorexic when they first go for treatment.*

**தொகுப்பு : தவத்துரை**



சித்தர் + செங்கமலம்
அருளம்பலம்
சின்னத்துரை
பரிமளம்
நேசமலர்
புவனேஸ்வரி
பரமகுரு
களஞ்சியம்
லக்ஷ்மி
வேலர் + சின்னம்மா
இராமசாமி
ஆசைப்பிள்ளை
யோகம்மா
செல்லத்துரை
சின்னத்துரை
+
யோகம்மா
புஸ்பராணி
+
தவத்துரை
யுவனிஸ்ஹா
யோகராணி
+
அரசரட்னம்
அக்சயன்
சமரக்கொடி
+
கலாமாலினி
சாருகா
லாவிகா
தருண்
ஜெயக்கொடி
+
தர்சினி
சாருஜா

# நன்றி நவிலல்

பாசத்தின் பிறப்பிடமாய்

அன்பின் இருப்பிடமாய்

பண்பின் உறைவிடமாய் நின்று.

எமக்கு நல் ஆசானாய் சிறந்த வழிகாட்டியாய் எம்முடன் வாழ்ந்த

எங்கள் அம்மா **திருமதி யோகம்மா சின்னத்துரை** அவர்களின்

மறைவுச் செய்தி கேட்டு

நேரில் வந்து அனுதாபம் தெரிவித்த

நண்பர்கள் அன்பர்கள் உறவினர்களுக்கும்.

தொலைபேசி, ஈமெயில், மற்றும் இணையத் தளங்கள் மூலம்

அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும் செய்தி அறிந்தவுடன் ஓடிவந்து

எல்லாவகையிலும் தேவையான உதவிகளைச் செய்து தந்து சிறப்புற

அனைத்தையும் நடாத்தித்தந்த அனைவருக்கும்.

நேரடி ஒளிபரப்பு ஏற்பாடுகளைச் செய்து தந்த அனைவர்க்கும். இறுதிக்

கிரியைகள் 24.06.2012 அன்று நடைபெற்றபோது கிரியையை முறைப்படி

செய்வதற்கு உறுதுணையாய் நின்ற சைவ நெறியாளர் திரு முருகானந்தன்

அவர்களுக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கெடுத்த அனைவருக்கும்

இம்மலரை சிறப்புற அச்சிட்டு வழங்கிய

ஜே.ஆர் அச்சத்தாருக்கும் எமது உளமார்ந்த

நன்றியைத்

தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

**இங்ஙனம்,**
**குடும்பத்தினர்.**

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Designed & Printed @ JR Print, T : 0208 503 6643